ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1603/35 - 2009 මැයි 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2009.05.28

1603/35 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் வட்டறேகே ஆராச்சிலாகே விஸ்வ வர்ணபால ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாகக் கருதப்பட்டதான கட்டளையாகிய இலங்கை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் கட்டளையை, அத்தகைய கருதப்பட்ட கட்டளைக்கான அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையினை இடுவதன் மூலம் இக்கட்டளையைத் திருத்துகின்றேன்:-

"அட்டவணை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| பீடம் | துறைகள் |
| கலைப்பீடம் | 1. பொருளியல் துறை |
| | 2. சமூக புள்ளிவிபரவியல் துறை |
| | 3. புவியியல் துறை |
| | 4. சிங்களம், மக்கள் தொடர்பாடல் துறை |
| | 5. சரித்திரம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை |
| | 6. சமூகவியல், சமூக மானிடவியல் துறை |
| | 7. பாளி பௌத்த கற்கைகள் துறை |
| | 8. மொழி கலாச்சார கற்கைகள் துறை |
| | 9. ஆங்கிலத்துறை |
| | 10. அரசியல் விஞ்ஞானத் துறை |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 1. கணிதத் துறை |
| | 2. பௌதிகவியல் துறை |
| | 3. இரசாயனவியல் துறை |
| | 4. தாவரவியல் துறை |
| | 5. வனவியல் சுற்றாடல் விஞ்ஞானத் துறை |

**அட்டவணை** (தொடர்ச்சி)

| நிரல் I | நிரல் II |
|---|---|
| *பீடம்* | *துறைகள்* |
| | 6. விலங்கியல் துறை |
| | 7. புள்ளிவிபரவியல், கணனித் துறை |
| | 8. உணவு விஞ்ஞான தொழில்நுட்பத் துறை |
| முகாமைக் கற்கைகள், வர்த்தக பீடம் | 1. வியாபார நிர்வாகத் துறை |
| | 2. பொது நிர்வாகத் துறை |
| | 3. வர்த்தகத்துறை |
| | 4. தோட்ட முகாமை மதிப்பீட்டுத் துறை |
| | 5. கணக்கியல் துறை |
| | 6. சந்தைப்படுத்துதல் துறை |
| | 7. மனிதவள முகாமைத்துறை |
| | 8. நிதித்துறை |
| | 9. தகவல் தொழில் நுட்ப தீர்மான விஞ்ஞானத் துறை |
| | 10. முடிவு எடுக்கும் அறிவியல் துறை |
| | 11. வியாபாரப் பொருளியல் துறை |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 1. நுண்ணுயிரியல் துறை |
| | 2. உடற்றொழிலியல் துறை |
| | 3. ஒட்டுண்ணியியல் துறை |
| | 4. குழந்தை நல மருத்துவத் துறை |
| | 5. சமுதாய மருத்துவத் துறை |
| | 6. குடும்ப மருத்துவத் துறை |
| | 7. உயிர் இரசாயனத் துறை |
| | 8. நோயியல் துறை |
| | 9. மருத்துவத் துறை |
| | 10. மனநல மருத்துவத் துறை |
| | 11. பெண்ணியல் மகப்பேற்றுத் துறை |
| | 12. மருந்தியல் துறை |
| | 13. உடற்கூறியல் துறை |
| | 14. அறுவைச் சிகிச்சைத் துறை |
| | 15. குற்றவியல் மருத்துவத் துறை |
| | 16. மருத்துவக் கல்வி சுகாதார விஞ்ஞானத் துறை |

பேராசிரியர் வட்டறேகே ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2009, ஏப்பிறல் 28.

6- 214

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.